# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் • திருவள்ளுவர் ஆண்டு 2057, - மார்ச் 14, 2026

Weekly E-paper • March 14, 2026





## சமையல் அறையில் ஒரு சர்வதேச அரசியல்!

காசு. நாகராசன்

### அறிவே ஆயுதம்! கல்வியே கேடயம்!

முனைவர்.காந்தி பாபு

### ராமா...ராமா, கரணம் போடு....

தலையங்கம்

### திருச்சி மாநாடு, SIXER ! திமுக ஆட்சி, FIXED !

செ.ராஜா

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ●திருவள்ளுவர் ஆண்டு 2057, - மார்ச் 14, 2026

Weekly E-paper ●March 14, 2026


# சமையல் அறையில் ஒரு சர்வதேச அரசியல்!

காசு. நாகராசன்

நாடு முழுவதும் சமையல் எரிவாயு சிலிண்டர்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. அதனால், சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய உணவகம் உட்பட நாடெங்கும் பல்வேறு உணவகங்களில் உணவு சமைக்கிற பணி நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் எரிவாயு சிலிண்டர் அல்லாத மாற்றுத் திட்டங்களை தயார் நிலையில் வைத்திருப்பதாகத் தமிழ்நாடு அரசின் சுகாதாரத்துறை அமைச்சர் தெரிவிக்கிறார்.




சிலிண்டர் தட்டுப்பாடு பிரச்சனைக்குத் திமுக அரசு மாற்று வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று அன்புமணி ராமதாஸ் 'அறிவுபூர்வமான'ஓர் அறிக்கையை வெளியிட்டு இருக்கிறார். அதேநேரம், சிலிண்டர் தட்டுப்பாடு என்பதே கிடையாது, அது திமுக வேண்டுமென்றே திட்டமிட்டு சொல்லுகிற பொய்ச் செய்தி என்றும், நானும் ரவுடிதான் என்பதுபோல நானும் ஒரு கேஸ் டீலர் தான் என்றும் அதிரடியாக விளக்கம் அளித்திருக்கிறார் திருவாளர் நயினார் நாகேந்திரன். ஆனால், இந்தியா முழுவதும் கேஸ் சிலிண்டர்களைப் பதுக்கினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுத்த கையோடு வீட்டுப் பயன்பாட்டுக்குரிய சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையைக் கணிசமாக உயர்த்தியும் இருக்கிறார் மிஸ்டர் நயினாரின் ஓனர் நரேந்திர தாமோதர் தாஸ் மோடி.

இப்படி எதிரும் புதிருமாக கேஸ் சிலிண்டர் பிரச்சனை பரவிக் கொண்டிருக்கிற சூழலில், உள்ளபடியே வளைகுடா பகுதியில் அமெரிக்கா தொடுத்திருக்கிற போர் நடவடிக்கை என்பது உலகளாவிய சிக்கலை ஏற்படுத்தியிருக்கிறது. உலகின் பொருளாதாரத்தைத் தீர்மானிக்கிற எண்ணெய் வளங்களை வசப்படுத்தி, தான் உலகின் சக்தி வாய்ந்த பொருளாதார மேலாதிக்க வாதியாக உயர வேண்டும் என்பதே அமெரிக்காவின் குறிக்கோள் ஆகும்.

ஆயுத விற்பனை, எண்ணெய் விற்பனை என அத்தனை விற்பனைகளிலும் தானே முதன்மை வியாபாரியாக இருக்க வேண்டும் என்கிற அதிகார ஆணவம் அமெரிக்காவைப் பிடித்தாட்டுகிற இந்தச் சூழலில், இந்தியாவின் தேசபக்தியை ஒட்டுமொத்தமாகக் குத்தகைக்கு எடுத்திருக்கிற பாஜக அரசோ, மொத்த தேசபக்தியையும் சுதேசி கதையையும் மான் கீ பாத் உரைக்குள் அடக்கி வைத்துவிட்டு, 'அய்யா, எஜமானே கட்டளையிடுங்கள்....

என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்று அமெரிக்க அதிபருக்கு முன்னால் கைகட்டி நிற்கிறார் பாஜக அரசின் 'பிரதான்' மந்திரியு, 56 அங்குல பராக்கிரமசாலியான மோடியானவர்.

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

# அறிவே ஆயுதம்! கல்வியே கேடயம்!

முனைவர்.காந்தி பாபு

ஒரு காலத்தில் கல்வி மறுக்கப்பட்ட இருண்ட காலத்தைக் கடந்து வந்திருக்கிறது தமிழினம். அந்த இருளை விரட்டி, ஒடுக்கப்பட்டோரின் இல்லங்களில் அறிவொளி ஏற்றியது திராவிட இயக்கம்!

பல்லாயிரம் ஆண்டுகளாக ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு மட்டுமே சொந்தமாக இருந்த கல்வி, இன்று சமூகத்தின் கடைசி வரிசையில் இருக்கும் மனிதனுக்கும் எட்டுகிறது என்றால், அதற்குப் பெயர் தான் சமூகநீதி




"கல்வி ஒன்றுதான் யாராலும் திருட முடியாத சொத்து". அடிக்கடி நினைவூட்டும் நம் முதலமைச்சர் அவர்கள், 'திராவிட மாடல்' ஆட்சியின் ஆணிவேர் என்பது 'அனைவருக்கும் கல்வி' என்பதில் உறுதியாக நின்று ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமையாக்குவதே இந்த அரசின் இலக்கு.

படிப்பு என்பது வெறும் சான்றிதழ் அல்ல; அது ஒரு மனிதனுக்குத் தன்னம்பிக்கையையும், பகுத்தறிவையும், சுயமரியாதையையும் வழங்குகிறது. யார் முன்னும் கையேந்தி நிற்காமல், நிமிர்ந்து நிற்கும் ஆற்றலைத் தருவது கல்வி மட்டுமே. வறுமையின் பிடியில் இருந்து ஒரு குடும்பத்தை முழுமையாக விடுவிக்க கல்வி எனும் ஏணி அவசியம். இன்று தமிழகத்தின் பிள்ளைகள் உலகமெங்கும் உயர்ந்த பொறுப்புகளில் அமர்ந்திருப்பதற்குக் காரணம், நீதிக்கட்சி காலம் முதல் விதைக்கப்பட்ட கல்விக் கொள்கைதான்.

திராவிட இயக்கம் ஒருபோதும் ஆயுதங்களை ஏந்தியதில்லை; அது புத்தகங்களை மட்டுமே ஏந்திப் போராடியது. அந்தப் போராட்டத்தின் தொடர்ச்சியாகவே, "கல்வியில் சிறந்த தமிழ்நாடு" என்ற இலக்கை நோக்கி நாம் நடைபோடுகிறோம்.

வாழ்க கல்வி! வளர்க பகுத்தறிவு! வெல்க சமூகநீதி!

ஸ்டாலின் தொடரட்டும்...

தமிழ்நாடு வெல்லட்டும்!

## முன்பக்கத் தொடர்ச்சி...

இந்தியா எங்கே எண்ணெய் வாங்க வேண்டும் ? எங்கே எண்ணெய் வாங்கக் கூடாது? எவ்வளவு நாட்கள் வாங்கவேண்டும்?

எங்கே எந்தப் பொருளை எவ்வளவு விலைக்கு விற்க வேண்டும்? என்றெல்லாம் அச்சுறுத்தி மிரட்டுகிறது பெரியண்ணன் அமெரிக்கா. அகண்ட பாரதத்தின் பிரதம மந்திரியோ, 'ஆகட்டுஞ்சாமி' என்று தலையாட்டுகிறார்.

தமிழ்நாட்டில் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை, அடிப்படைத் தேவைகளை ஒரு தாயின் மனோ நிலையில் இருந்து நிறைவேற்றுகிற தலைவராக நமது முதலமைச்சர் இருக்கிறார். எரிவாயு நெருக்கடி நிலைமை ஏற்பட்டவுடன் அரசின் தலைமை அதிகாரிகளுடனும், எரிசக்தித் துறைசார்ந்த பொறுப்பாளர்களுடனும் பேசுகிறார், ஆலோசனை நடத்துகிறார். பிரதமருக்கும் உடனடியாக நிலைமையைச் சீர்செய்யத் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்துகிறார்.

வாகனங்கள் எரிபொருளுக்காக வரிசையில் நிற்கிறன. வணிக சிலிண்டர்கள் நிறுத்தப்பட்டு விட்டன. சமையல் எரிவாயு சிலிண்டர்கள் 'இன்றோ? நாளையோ' என்று இருக்கிறது. நிலைமை இன்னும் மோசமாவதற்குள், என்ன செய்யப் போகிறார் பிரதமர் மோடி?

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## ராமா...ராமா, கரணம் போடு....



குஜராத், துவாரகாவில் திராவிடர்கள் ஆட்சி செய்தார்களாம். அதனால் மோடிக்கும், திராவிடத்திற்கும் தொப்புள்கொடி உறவு உள்ளதாக டி.டி.வி.தினகரன் திருச்சி பாஜக கூட்டத்தில் பேசியிருக்கிறார். குஜராத்தை ஆட்சி செய்த திராவிட மன்னன் சேரனா? சோழனா? பாண்டியனா? குஜராத்தி மொழி ஆரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது என்பது கூட தெரியாத 'ஞானசூன்ய' மாகப் பேசுயிருக்கிறார், டி.டி.வி.

திமுக அழியும் நிலையில் இருக்கிறதாம், பிரபல சோதிடர் எடப்பாடியின் கணிப்பு. இதை அழிந்து கொண்டிருக்கும் அதிமுக எடப்பாடிக்குச் சொல்ல எந்தந் தகுதியும் இல்லையே!

தமிழ்நாட்டில் மக்கள் மாற்றத்தைக் கொண்டுவர தயாராகிவிட்டார்கள், டிரம்ப்பின் நண்பர் மோடி சொல்கிறார். அப்படி எல்லாம் இல்லை, திராவிட ஆட்சி தொடரவே விரும்புகிறார்கள் தமிழர்கள் என்பதை ஏனோ மறைக்கிறார் அவர்.

தமிழ்நாட்டை நாங்கள் முன்னேற்றுவோம் என்று பியூஸ் கோயல் சொல்கிறார். அது உத்தரப் பிரதேசம் போல இருக்கும் என்பதையும் சேர்த்துச் சொல்லி இருக்கலாம்.

திமுகவில் வாரிசு அரசியல் என்கிறார், நயினார் நாகேந்திரன்.

வேத்பிகாஷ்கோயல்xபியூஸ்கோயல்;தேபேந்திரபிரதான் x தர்மேந்திர பிரதான்; ராஜ்நாத்சிங் x பங்கஜ் சிங்; எஸ்.ஆர்.பொம்மைxபசவராஜ்பொம்மை;வசுந்தர ராஜே x துஷ்யந்த் சிங்; மேனகா காந்தி x வருண் காந்தி இப்படி நீண்டுகொண்டு போகும் பாஜக வாரிசுகளை ஏன் சொல்ல மறுக்கிறார் நயினார்?

மொத்தத்தில் திருச்சி பாஜக மாநாட்டில் "ராமா, ராமா கரணம் போடு" என்பதைப்போல என்டிஏ கூட்டணியினர் 'கரணம்' போட்டிருக்கிறார்கள், உருப்படியாய்ப் பேசியதாகத் தெரியவில்லை.


திருச்சிக்கு வந்தார் சென்றார் மோடி.

திருச்சிக்குச் சென்றார் வென்றார் ஸ்டாலின்.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்:
வெற்றிச்செல்வன்
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408



# திருச்சி மாநாடு, SIXER ! திமுக ஆட்சி, FIXED !

செ.ராஜா, பெஸ்ட் கூட்டமைப்பு

"ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும்" என்ற முழக்கத்துடன் திருச்சி சிறுகனூரில் கூடிய தி.மு. கழகத்தின் 12ஆவது மாநில மாநாடு, கழகத்தின் வெற்றியை உறுதிசெய்து விட்டது.

தவழ்ந்துவந்து புறக்கடை வழியாக முதல்வர் பதவியை இரந்து வாங்கியவர் அல்ல முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள். பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர்காட்டியவழியில்மக்களால்தேர்ந்தெடுக்கப்பட்ட முறையான மக்கள் பிரதிநிதி, முதலமைச்சர் அவர்.



நாடாளுமன்ற உறுப்பினரும், கழகத் துணைப்பொதுச்செயலாளருமான கனிமொழி அவர்கள் தலைமையிலான 2026 திமுக தேர்தல் அறிக்கை

தமிழ்நாட்டின் வளர்ச்சி மற்றும் மக்கள் நலன் சார்ந்த பல்வேறு சிறப்பு அம்சங்களைக் கொண்டிருக்கும் என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார் முதல்வர். இதனை வழக்கம்போல காப்பி பேஸ்ட் செய்யக் காத்திருக்கிறார்கள் நம் எதிரணியினர்.

2026 தேர்தலில் தமிழ்நாடு அணிக்கும், டில்லி அணிக்கும்தான் போட்டி என்ற நிலையில்

தமிழ்நாட்டைப் புறக்கணிக்கும் பாஜக ஒன்றியஅரசு கூட, தமிழ்நாடு முதன்மை மாநிலம் என்று சான்று தருகிறது டில்லில் வைத்து. தமிழ்நாடு வந்தால் மட்டும் கதறுகிறார்கள்.

மாநாட்டில் பேசிய முதல்வர் அவர்கள்
மகளிர் உரிமைத் தொகை, மகளிர் விடியல் பயணம்,
புதுமைப் பெண்,
நான் முதல்வன்,
தமிழ் புதல்வன்,
காலை உணவுத் திட்டம்,
தாயுமானவன் திட்டம்,

சமூகநீதி, கல்வி வளர்ச்சி, பெண்கள் முன்னேற்றம், இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகள், தொழில் துறை வளர்ச்சிகள், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக அரசு மேற்கொண்ட பல்வேறு நலத் திட்டங்கள் என்று பட்டியலிட்ட சாதனைகளால் ஒவ்வொரு குடும்பத்தினரும் பயன்பெற்றுள்ளனர். எனவே தமிழ்நாட்டை ஸ்டாலின்தான் ஆள்வார், திராவிட மாடல்தான் ஆட்சி அமைக்கும் என்பதை மீண்டும் அவர் உறுதிசெய்து இருக்கிறார்.

தமிழ்நாட்டின் நலனுக்காக ஒன்றிய அரசிடம் நாம் கேட்பது கல்விக்கான நிதி, நீர்வளத்துறை (ஜல் ஜீவன்) திட்ட நிதி, 100 நாள் வேலைத்திட்ட நிதி, பேரிடர்கால நிவாரண நிதி. ஆனால் ஒன்றிய பாஜக அரசு தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குக் கேட்டதைத் தரவில்லை. மாறாக நாம்கேட்காததைத்

தந்துள்ளனர். அதாவது தமிழக ஆளுநர் மூலம் குடைச்சல், நீட் தேர்வு, நுழைவுத் தேர்வுகள், இந்தி மொழித் திணிப்பு என்று பட்டியல் நீள்கிறது என்பதை மாநாடு அம்பலப்படுத்தி இருக்கிறது.

அரசியலில் என்டிஏ கூட்டணியைக் கதிகலக்கி இருக்கிறது திருச்சி மாநாடு என்று தான் சொல்ல வேண்டும். அதனால்தான் மாநாட்டுக்கு முதல்நாள்வரை பேசாமல் இருந்த பாஜக, விஜயை தங்கள் என்டிஏ கூட்டணிக்கு வரச்சொல்லி ரகசியமாகப் பேசிக்கொண்டிருக்கிறது என்ற செய்து கசிந்து வந்துவிட்டது சமூக ஊடகங்களில்.

அதிமுகவை பாஜகவிடம் அடகு வைத்துவிட்டார் எடப்பாடியார். பாஜகவைத் தமிழ்மண் ஏற்றுக் கொள்ளாது.

கிரிக்கெட்டில் மெதுமெதுவாக விக்கட் எடுத்தாலும், எப்படி கடைசிப் பந்தில் சிக்ஸர் அடித்து வெற்றி பெறுகிறார்களோ அதுபோல, 200 தொகுதிகளுக்கு மேல் இமாலய வெற்றியைத் தரும் என்ற நம்பிக்கைத் தந்திருக்கிறது, திருச்சி திமுகவின் 12ஆவது மாநாடு!